



admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 04 | Issue: 017 | 4 Pages | 17.08.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 017 | 4 பக்கங்கள் | 17.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

**விளக்கம்:**
தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிட மிகவும் பெரிதாகும்.

## ஹங்கேரி: சுற்றுலா பஸ் கவிழ்ந்து விபத்து 12 பேர் பலி



புடாபெஸ்ட், ஆக. 17 ஐரோப்பிய நாடான செர்பியாவில் இருந்து போலாந்துக்கு சுற்றுலா பஸ் சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் 59 பேர் பயணித்தனர். இந்நிலையில், பஸ் இன்று ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்ட் அருகே மிசொகிரடெஸ் நகரில் உள்ள நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தது. அப்போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் பஸ்சில் பயணம் செய்தவர்களில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், விரைந்து சென்று காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஜிம்பாப்வே: ஏரியில் படகு கவிழ்ந்து விபத்து பலி எண்ணிக்கை 72ஆக உயர்வு



ஹராரே, ஆக. 17 ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு ஜிம்பாப்வே. இந்நாட்டில் படகு போக்குவரத்து அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. படகு விபத்து இதனிடையே, அந்நாட்டின் கரிபா ஏரியில் கடந்த செவ்வாய்கிழமை படகு சென்றுகொண்டிருந்தது. அந்த படகில் 153 பேர் பயணித்தனர். ஏரியின் மையப்பகுதியில் சென்றபோது படகு ஏரியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. பலி எண்ணிக்கை உயர்வுஇந்த விபத்தில் ஏற்கனவே 44 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்ட நிலையில் பலி எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி படகு விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்துள்ளது. விபத்தில் 77 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் எஞ்சிய 4 பேரின் நிலை என்ன? என்று தெரியவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை 51ஆக உயர்வு




ஜகார்த்தா, ஆக. 17 இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் இதுவரை 51 பேர் பலியாகி உள்ளனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை தேடும்பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. பயங்கர நிலநடுக்கம்பசிபிக் பெருங்கடலின் 'நெருப்பு வளையம்' பகுதியில் அமைந்துள்ள இந்தோனேசியா, உலகிலேயே நிலநடுக்கங்களும், எரிமலை வெடிப்புகளும் அதிகம் நிகழும் ஆபத்தான நாடாக கருதப்படுகிறது. கடந்த 2004ம் ஆண்டு இங்கு ஏற்பட்ட சுனாமி, உலகையே உலுக்கிய சோகம் இன்றும் மக்கள் மனதில் ஆறா வடுவாக உள்ளது.இந்நிலையில், அங்கு மற்றொரு பெரும் இயற்கைப் பேரிடர் அரங்கேறியுள்ளது. இந்தோனேசியாவின் கிழக்கு நுசா தெங்காரா மாகாணத்தில் உள்ள புளோரஸ் கடல் பகுதியில், உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 5.58 மணிக்கு மக்கள் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில், கடலுக்கு அடியில் 10 கி.மீ ஆழத்தில் திடீரென பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.இது ரிக்டர் அளவுகோலில் 7.7 புள்ளிகளாக பதிவானது. நிலநடுக்கத்தின் அதிர்வால் வீடுகள் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்கள் சீட்டுக்கட்டுகளைப் போல சரிந்து தரைமட்டமாயின. தூக்கத்தில் இருந்த மக்கள் என்ன நடக்கிறது என்று தெரியாமல், கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி அலறினர்.சிக்கா, மங்கராய் உள்ளிட்ட பகுதிகளில் வீடுகள் இடிந்தும், நிலச்சரிவில் சிக்கியும் இதுவரை51 பேர்பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மீட்புக் குழுவினர் மேலும் நான்கு உடல்களை மீட்டதைத் தொடர்ந்து இந்த எண்ணிக்கை அதிகரித்தது. நிலச்சரிவுகளால் 900க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தும் சாலைகள் துண்டிக்கப்பட்டும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்த நிலையில், குறைந்தது 101 பேர் காயமடைந்தனர். நிலநடுக்கத்தால் சுமார் 5,000 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.சுனாமி எச்சரிக்கைமுன்னதாகநிலநடுக்கத்தைத் தொடர்ந்துகடலோரப்பகுதிகளுக்கு அரசு உடனடியாக சுனாமி எச்சரிக்கை விடுத்தது. இதனால் பீதியடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு, உயரமான மலைப் பகுதிகளை நோக்கி ஓடி னர்.முக்கிய நெடுஞ்சாலை மூடல்பின்னர் கடல் மட்டத்தில் பெரிய மாற்றம் இல்லாததால் எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. நிலநடுக்கத்தால் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. மலைப்பாதைகளில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் 700 கி.மீ நீளமுள்ள முக்கிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.போர்க்கால அடிப்படையில்இதனால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மீட்புக்குழுவினர் செல்ல முடியாமல் திணறி வருகின்றனர். தற்போது ராணுவ ஹெலிகாப்டர்கள் மூலம் காயமடைந்தவர்களை மீட்கும் பணி போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுவதால் இந்தோனேசியாவில் பெரும் சோகம் நிலவுகிறது.

# கர்நாடகாவில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம்: முதல்அமைச்சர் விஜய் கண்டனம்



சென்னை, கர்நாடகாவில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு முதல்அமைச்சர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து முதல்அமைச்சர் விஜய் விஜய் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:வேதனை அளிக்கிறது கர்நாடகாவின் சாம்ராஜ் நகர் மாவட்டம், ஹனூர் தாலுக்காவில்உள்ளகிராமங்களில் வசித்து வந்த தமிழர்களான அந்தோணி சாமி, ஜான் ரோஸ் பீட்டர், குமார் ஆகியோர், 2026 ஆகஸ்ட்15அன்றுஅதிகாலையில், காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில், கர்நாடக வன துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டது வேதனை அளிக்கிறது. இந்த படுகொலையை வன்மையாக கண்டிக்கிறேன்.இந்த சம்பவம் தொடர்பாகக்கர்நாடகவனத்துறை கொடுத்த விளக்கம் ஏற்புடையதல்ல. நேர்மையான விசாரணைஇந்த கொடூர சம்பவம் தொடர்பாக நேர்மையான விசாரணைநடைபெறவேண்டும். உயர்மட்ட விசாரணை குழு அமைத்து, தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட வர்களின் குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் கர்நாடக அரசு வழங்க வேண்டும். நடவடிக்கைஇதுபோன்று இனியொரு சம்பவம் நடக்காமல் இருக்க, கர்நாடக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## கோழித்தீவன உற்பத்தியால் மக்காச்சோளத்துக்கு மவுசு அதிகரிப்பு; விவசாயிகள் மகிழ்ச்சி



போடிப்பட்டி, கோழித்தீவன உற்பத்தியால் மக்காச்சோளத்துக்கு மவுசு அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.எத்தனால் உற்பத்திஇந்திய அளவில் முக்கிய விவசாயப்பயிராக மக்காச்சோளம் உள்ளது. தமிழ்நாடு, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், ஆந்திரா, மேற்குவங்காளம் மாநிலங்களில் அதிக அளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இந்திய அளவில் ஆண்டுதோறும் சுமார் 2 கோடியே 65 லட்சம் ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் தமிழ்நாட்டின் பங்களிப்பு சுமார் 13 லட்சத்து34 ஆயிரம்ஏக்கராகஉள்ளது.தமிழ்நாட்டின்தேவையில் 50 சதவீத அளவுக்கே சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலையில், வெளிமாநிலங்களில் இருந்து அதிக அளவில் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கோழித்தீவன உற்பத்தியில் முக்கிய மூலப்பொருளாக உள்ள மக்காச்சோளத்துக்கு சமீப காலங்களாக மவுசு அதிகரித்துள்ளது. பெட்ரோலில் 20 சதவீத எத்தனால் கலக்கப்பட்டு வரும் நிலையில், எத்தனால் உற்பத்தியில் முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் உள்ளது.விலை உயர்வுஎளிதில் மக்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் பைகள் தயாரிப்பிலும் மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. இதைத்தவிர வழக்கமான பயன்பாடுகளிலும் மக்காச்சோளம் உள்ளது. இதனால் மக்காச்சோளத்தின் தேவை அதிகரித்து, விலை ஏறுமுகமாகவே உள்ளது. தற்போது ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ.2 ஆயிரத்து 700க்கு மேல் விற்பனையாகிறது. பருவமழை கைவிட்டதால், வரும் காலங்களில் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் இருப்பு போதுமான அளவில் இருப்பவர்கள் மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம் என்று வேளாண்மைத்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.மேலும் அறுவடை செய்த மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விவசாயிகள் விற்பனை செய்வதன் மூலம் அதிக லாபம் பெற வாய்ப்பு உள்ளது. ஆனால் வெளிமாநில வரத்து எந்த அளவுக்கு இருக்கும் என்ற கணக்கீடுகளைப் பெற்று வேளாண்மைத்துறையினர் உரிய ஆலோசனைகள் வழங்கினால் விலை சரிவால் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கலாம். தற்போது நிலவி வரும் விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவே உள்ளது.பொருளாதார பாதுகாப்புஇதுகுறித்து விவசாயிகள்கூறுகையில்,படைப்புழுக்களிடமிருந்துபாதுகாக்க அதிக அளவில் மருந்து தெளிக்க வேண்டியது உள்ளது. மேலும் உரம், கூலி என அனைத்து செலவினங்களும் உயர்ந்துள்ளன. இதனால் மக்காச்சோள சாகுபடி அதிக செலவுபிடிக்கும் விஷயமாக மாறி விட்டது. மக்காச்சோளத்துக்கு ஆதார விலையாக குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரத்து 410 நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், அதைவிடக் குறைவாகவே கொள்முதல் செய்து வந்தனர்.தற்போதுதான் விலை உயர்ந்துள்ளது. இனிவரும் காலங்களில் ஆதார விலையைவிட குறைந்த விலைக்கு கொள்முதல் செய்யும் நிலை வரக்கூடாது. விலை குறைவு ஏற்பட்டால் அரசு நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியான பாதுகாப்பு கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றனர்.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மாபெரும் தூய்மைப்பணி நிகழ்வு ( ஸ்வெட்ச் பாரத் நிகழ்வு)



13.08.2026 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக மாபெரும் தூய்மைப்பணி நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வினை மதுரை காமராசர் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். முத்தையா அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரை வழங்கினார்.டீன் கண்ணதாசன் அவர்கள் முன்னிலை வகித்தார்.பல்கலைக் கழக இன்ஜினியரிங் பிரிவு தலைவர் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.இந்த மாபெரும் நிகழ்வில் மதுரைகாமராசர்பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட அன்னை பாத்திமா கல்லூரி அருளானந்தர் கல்லூரி மன்னர் கல்லூரி விவேகானந்தா கல்லூரி தினமலர் SLCS கல்லூரியைச்சார்ந்த 400 மாணவர்களும் அந்தந்த கல்லூரியைச் சார்ந்த திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் அன்னை பாத்திமாகலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பாக நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 60 பேர் கலந்து கொண்டனர்.பல்கலைக் கழக வளாகத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகள் மக்கும் குப்பை மக்காத குப்பை எனத் தரம் பிரித்து மா லையில் பதிவாளர் அவர்கள் முன்னிலையில் பல்கலைக் கழக தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். மோ.பாண்டி அவர்கள் செய்திருந்தார். அன்னை பாத்திமா கல்லூரி சார்பில் திட்ட அலுவலர் முனைவர். போ. முனியாண்டி அவர்கள் மாணவர்களை வழி நடத்தினார்.

## மக்களோடு மக்களாக அமர்ந்து சமபந்தி விருந்து உணவருந்திய அமைச்சர்



சென்னை வேளச்சேரியில் சுதந்திர தினத்தையொட்டி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோவிலில் சமபந்தி விருந்து வழங்கிய அமைச்சர் குமார். சென்னை வேளச்சேரியில் 80வது சுதந்திர தினத்தையொட்டி தண்டீஸ்வரர் திருக்கோவிலில், செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் குமார் தலைமையில் சமபந்தி விருந்து வழங்கி உணவருந்திய அமைச்சர் குமார்



ஈரோடு மாவட்டம், 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அவர்கள் சிறப்பாக பணியாற்றிய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நற்சான்றிதழை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி ,மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், மாவட்ட வருவாய் அலுவலர்



தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 80வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா வைத்தியநாதன் அவர்கள் சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை போர்த்தி பரிசு பொருட்கள் வழங்கி கௌரவித்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே எஸ் பிரவீன் கௌதம் அவர்கள் உள்ளனர்.

## அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தில் தலைவர் ஜி.கே. விவசாய மணி அவர்கள் தலைமையில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது



அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் திருப்பூர்பிரிட்ஜ்வே காலனியில் உள்ள சங்க தலைமை அலுவலகத்தில் இந்திய திருநாட்டின் எண்பதாவது சுதந்திர தின விழாவை கொண்டாடும் விதமாக கொடிக்கம்பம் நடப்பட்டு அதன் முன் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு கோலம் போடப்பட்டு சங்க அலுவலகம் முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இந்தியாவின் 80 வது சுதந்திர தின விழாவை நிறுவன தலைவர் ஜி.கே. விவசாய மணி (எ) ஜி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது இந்த நிகழ்வில் தலைவர் ஜிகே விவசாய மணி (எ) ஜி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அரசு நடைமுறையின் படி வந்தே மாதரம் முதலில் பாடப்பட்டு பிறகு தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டு தேசிய கொடியை தலைவர் ஏற்றி வைத்தார் தேசிய கொடிக்கு அனைவரும் வீர வணக்கம் செலுத்தினர் பிறகு தலைவர் குழந்தைகளுக்கு நிர்வாகிகளுக்கு இனிப்பு வழங்கினார் மேலும் நடந்த சிறப்பு கூட்டத்தில் தலைமை சங்க நிர்வாகிகள் சுதந்திரத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களை சங்க நிர்வாகிகளிடம் பகிர்ந்து கொண்டனர் தலைவர் சிறப்பு உரையாற்றினார் மேலும் விழா நிறைவு பெற்றது இந்த விழாவில் சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர் அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது

## தேனி தர்மாபுரி விடுமுறை நாளில் மண் கொள்ளை



தேனி மாவட்டம் தேனி ஒன்றியத்திற்குட்பட்ட தர்மாபுரி கிராமம் அருகே சீலப்பாலக்கோட்டை கிராமத்திற்கு உட்பட்ட தேனி யூனியனுக்கு சொந்தமான வீரகவுண்டர் குளத்தில் அழகர் என்பவர் விவசாயத்திற்கு மண் எடுக்க வட்டாட்சியரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு மற்றும் தேனி யூனியன் வட்டார வளர்ச்சி (கிராம ஊராட்சி, அதிகாரிகள் மூலம் வழங்கப்படும் நடை சீட்டு இல்லாமல் வணிகத்திற்காக பத்துக்கும் மேற்பட்ட ட்ராக்டர் மூலம் சுதந்திர தின நாளா அன்று விடுமுறையாகும் ஆனால் எவ்வித அரசு அதிகாரிகள் அனுமதியில்லாமல் வண்டல் மண் கொள்ளை நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் குளத்தில் இருந்து மண் எடுத்துவரும் ட்ராக்டர்கள் நடை சீட்டு இருந்தால் மட்டும் மண் எடுத்து செல்ல அனுமதி ஆனால் இது போன்ற மண் மாபியாயக்கள் VAO RI , மற்றும் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரியாமல் எப்படி மண் எடுத்து செல்ல முடியும் இந்த மண் கொள்ளை தடுக்க சம்மந்தப்பட்ட வீரபாண்டி காவல் நிலைய ஆய்வாளர் நடைச் சீட்டு இல்லாமல் மண் எடுத்து செல்லும் ட்ராக்டர்களை பறிமுதல் செய்ய வேண்டும் என அப்பகுதி சமூக ஆர்வலர்கள் மாவட்ட ஆட்சியருக்கு புகார் தெரிவித்துள்ளனர் மேலும் இது போன்று அதிகாரிகள் கண்ணில் மண்ணை தூவி விட்டு மண் கொள்ளையில் ஈடுபடுவதை தடுக்க வேண்டும் என்பது அப்பகுதி சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாகும்.

## நகர காங்கிரஸ் கட்சி சார்பில் சுதந்திர தின விழா




நாடு முழுவதும் நேற்று 80வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.இதில் ஒரு பகுதியாக குன்னூர் நகர காங்கிரஸ் கட்சி சார்பில் நகரத் தலைவர் ஆனந்தகுமார் தலைமையில், ராஜன், ராமலிங்கம், பிக்கட்டி சுப்பிரமணி,நித்தியா சுசீந்திரன் ஆகியோர் முன்னிலையில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது முன்னதாக,கட்சி அலுவலகத்தில் மறைந்த தலைவர்களின் படங்களுக்கு நிர்வாகிகள் விஜயா சாந்தி வினிதா ஆகியோர்மாலைஅணிவித்துமரியாதைசெலுத்தினர், மூத்த நிர்வாகி பார்வதி அம்மாள் தேசியக்கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் கட்சியினர் மவுண்ட் ரோடு வழியாக ஊர்வலமாக வந்து காந்தி மற்றும் காமராஜர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். விழாவில் நிர்வாகிகள் அரிச்சந்திரன், கிங்ஸ்டன், மது,விஷ்ணு, ராமச்சந்திரன், செல்வம்,நோயல், ராஜலட்சுமி, சுரேந்திரன் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.முடிவில் ஜெயக்குமார் நன்றி கூறி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

## துறையூர் மதுராபுரி ஊராட்சியில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்



சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அனைத்து கிராமங்களில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது அந்த வகையில் திருச்சி மாவட்டம் துறையூர் அருகே உள்ள மதுராபுரி கிராமத்திற்கான கிராம சபை கூட்டம் கிராம எல்லைக்கு உட்பட்ட நரிக்குறவர் காலனி பகுதியில் நடைபெற்றது. இந்த கிராம சபை கூட்டத்திற்கு மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் துரைராஜ் தலைமை வகித்தார். மதுராபுரி ஊராட்சி செயலர் கண்ணதாசன் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் நியாய விலை கடை ஊழியர்கள் சுகாதாரத்துறை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு துறை சார்பாகவும் மக்கள் எழுப்பிய கோரிக்கைகள் உடனடியாக தீர்த்து வைக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் எழுப்பிய குடிநீர் சாக்கடை தெருவிளக்கு வசதிகள் உள்ளிட்ட 22 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நாகையில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சங்க மாவட்ட அமைப்பு கூட்டம்




தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சங்க நாகை மாவட்ட நிர்வாகிகள் அமைப்பு கூட்டம் ஓய்வூதியர் அலுவலக சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க நிர்வாகி வீரசெல்வம் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் செந்தில்குமார், கௌசல்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக சங்க நிர்வாகி ரவிச்சந்திரன் வரவேற்றார். கூட்டத்தில் பொது சுகாதாரத்துறை தினசரி அறிக்கை பதிவிட இணைய வழி சேவையை ஏற்படுத்த வேண்டும். கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வுநிலை சிறப்பு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். நீர்வளத் துறையில் 10 ஆண்டுகளுக்குமேலாகபொதுதொகுப்புஊதியத்தில் பணிபுரிபவர்களுக்கு காலவரை ஊதியம் வழங்க வேண்டும்என்பனஉள்ளிட்டபல்வேறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் புதிய மாவட்ட தலைவராக செந்தில்குமார், மாவட்ட செயலாளர் கேசவன், மாவட்ட பொருளாளர் அன்பரசி, மாவட்ட துணைதலைவர் குமார், மாவட்ட இணைசெயலாளர் அன்பரசன்,மாநிலசெயற்குழுஉறுப்பினர்ஜெய்சங்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் குச்சனூர் பேரூர்ராட்சியில் 80 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு பேரூர்ராட்சி தலைவர் ரவிச்சந்திரன் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து கொடி வணக்கம் செலுத்தினார். உடன் உப தலைவர் மணிகண்டன் மற்றும் பேரூர்ராட்சி கவுன்சிலர்கள் ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூரை சேர்ந்த நேர்மையான அரசு அதிகாரிக்கு தங்கப்பதக்கம் முதலமைச்சர் வழங்கினார்




திருப்பூர் வடக்கு அனுப்பர்பாளையத்தை சேர்ந்த கணேசன் பழனியம்மாள் அவர்களின் இளைய மகன் வாஞ்சிநாதன் அவர்கள் மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் உயர் அரசு அதிகாரியாக பணியாற்றி வருகிறார் ஆகஸ்ட் 15 ல் 80 வது சுதந்திர தின நாளில் மாண்புமிகு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களால் மத்திய கூட்டுறவு வங்கியை திறம்பட சிறப்பாக வழி நடத்தி சென்றதற்காகவும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் உதவி வழங்கி அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியதற்காகவும் தமிழ்நாட்டிலேயே முதன்மையானவராக அர்ப்பணிப்புடன் நேர்மையாக பணியாற்றியதற்காக தங்க பதக்கம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

## திட்டச்சேரி அரசு பள்ளி மைதானத்தில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி




நாகைமாவட்டம்திட்டச்சேரிஅரசினர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் ஆதில் சோலார் எனர்ஜி மற்றும் திட்டச்சேரி மன்சூர் கைப்பந்து கழகம் இணைந்து நடத்திய மாநில அளவிலான கைப்பந்து போட்டி நடைபெற்றது. மன்சூர் கைப்பந்து கழகத்தின் முன்னாள் வீரர் முகமது நசுருதீன் தலைமை தாங்கினார். நாகை மாவட்ட கைப்பந்து கழக செயலாளர் கண்ணன், ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் அப்துல் ரசீது, பேரூராட்சி உறுப்பினர் முகமது சுல்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாகை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணிய பாலச்சந்திரா, வருவாய் கோட்டாட்சியர் சங்கரநாராயணன் ஆகியோர் கலந்துகொண்டு போட்டியினை தொடங்கி வைத்தனர். சோலார் எனர்ஜி நிறுவனர் முகமது ரபி வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு தொகை மற்றும் வெற்றி கோப்பைகளை வழங்கினார். இப்போட்டியில் முதல் பரிசினை மதுரை மேட்டுப்பட்டி அணியினரும், இரண்டாம் பரிசினை கோயம்புத்தூர் அணியினரும், மூன்றாம் பரிசினை சென்னை அணியினரும், நான்காம் பரிசினை கோயம்புத்தூர் அணியினரும் பெற்றனர். இதில் பேரூராட்சி மன்ற தலைவர் ஆயிஷா சித்திகா, துணைத்தலைவர் நர்கீஸ்பானு, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், அப்துல் பாசித், சுல்தான் ரித்தாவுதீன், செய்யது ரியாசுதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வாலிபால் பயிற்சியாளர் முகமது தௌபிக் வரவேற்றார். முடிவில் மன்சூர் கைப்பந்து கழகத்தின் முன்னாள் வீரர் முகமது ஈசா நன்றி கூறினார்.



சேலம் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் சித்தர் கோயில் பகுதியில் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது இதில் சிவராஜ் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் கல்பனா சிவராஜ் கலந்துகொண்டு துவக்கி வைத்தார் இதில் உறவினர்கள் பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கிராமங்களாக சென்று தூய்மை பணி மேற்கொண்டனர்.

# காஞ்சிபுரத்தில் சுதந்திர தின விழா: ரூ.1.51 கோடி நலத்திட்ட உதவிகள்



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அண்ணா காவல் அரங்கில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் தி. சினேகா தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து காவல்துறை மற்றும் ஊர்க்காவல் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். மேலும், சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் மொழிப்போர் தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 93 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 51 லட்சத்து 91 ஆயிரத்து 930 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதில்வீட்டுமனைப்பட்டா,காதொலிக்கருவிகள், தையல் இயந்திரங்கள், பால் பண்ணைத் தொழில் தொடங்க கடனுதவி, பயிர் விளைச்சல் போட்டி பரிசுத் தொகை, நுண்ணீர் பாசன உதவி, சமுதாய முதலீட்டு நிதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் அடங்கும்.

மேலும், பல்வேறு அரசு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 221 அரசு அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள்மற்றும்காவல்ஆளிநர்களுக்குபாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து வேலம்மாள்போதி வளாகம், SSKV தொடக்கப்பள்ளி, தியாகி நடுநிலைப்பள்ளி, CMS ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, MLM மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 310 மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் கெ.ரா. திவ்யஸ்ரீ, கூடுதல் ஆட்சியர் ஆஷிக் அலி, ஸ்ரீபெரும்புதூர் சார் ஆட்சியர் வி. நல்லசிவன், மாவட்ட உதவி ஆட்சியர் அமன் திவாரி, மாநகராட்சி ஆணையர் வினோத் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகம் எதிரில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# நரசிங்கபுரம் கிராமத்தில் சாலையை பொது பயன்பாட்டிற்கு மாற்றிடகோரி கிராம சபை கூட்டத்தில் மனு.



திருச்சி மாவட்டம் துறையூர் அருகே உள்ள நரசிங்கபுரம் கிராமத்தில் ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஆக்கிரமிப்பு சாலையை அகற்றி பொது பாதையாக மாற்றி தர கோரிஅப்பகுதிபொதுமக்கள்கிராமசபைகூட்டத்தில் மனு அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது துறையூர் அருகே உள்ள நரசிங்கபுரம் கிராம எல்லைக்குட்பட்ட சர்வே எண் 217/6A மற்றும் 217/6B அமைந்துள்ள மனைப்பிரிவுகளில் 20 அடி அகலம் 160 அடி நீளம் பாதை அமைந்துள்ள மனைகளை கிரையம் பெற்று 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். மேற்படி இடத்தில் உள்ள பாதையானது தற்காலம் உட்பிரிவு செய்யப்பட்டு கிராம ஊராட்சித் தலைவரின் பெயரில் பட்டா ஏற்படுத்தப்பட்டு கிராம ஊராட்சி நிர்வாகத்தால் தார் சாலை அமைத்து தெரு மின்விளக்குகள் போட்டும் கழிவுநீர் வாய்க்கால்கள் அமைத்தும் சுமார் 30 ஆண்டுகளுக்குமேலாககிராமஊராட்சிநிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.அந்தப் பாதையின் வழியாகத்தான் நாங்கள் சென்று வருகிறோம்.

இந்நிலையில்அனைத்து மனைகளையும் தேவராஜ் என்பவர் விற்பனை செய்த போதிலும் தேவராஜ் மகன் புகழேந்தி என்பவர் மனையில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பாதையை தனது இடம் என்று சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமிப்பு செய்து அந்த பொது பாதையில் யாரும் செல்லக்கூடாது என தகராறு செய்தும் ஊராட்சி மன்ற தலைவரின் பெயரில் உள்ள பட்டாவை சட்ட விரோதமாக ரத்து செய்ய முயற்சித்து வருகிறார். இதுகுறித்து ஏற்கனவே மாவட்ட ஆட்சியர் ஆர்டிஓ தாசில்தாரிடம் மனு அளித்துள்ளோம். எனவே மேற்படி மனை பிரிவு பாதை ஊராட்சி மன்ற தலைவரின் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கூடாது என்றும் பாதையில் உள்ள சட்டவிரோத ஆக்கிரமிப்பினை அகற்றி தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் கீழ் அந்த பாதையை உள்ளாட்சி அமைப்பின் பொதுப் பயன்பாட்டின் பாதையாக மாற்றிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று(15.08.2026) மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், எஸ்.புளியங்குளம் கிராமத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 80 ஆவது சுதந்திர தின விழா



நகராட்சி ஆணையாளர் மு. மங்கையர்க்கரசன் தலைமையில் நகர் மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ் தேசப்பிதா மகாத்மா காந்தி திரு உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த பிறகு நகராட்சி வளாகத்தில் உள்ள கொடிமரத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து கொடி வணக்கம் செலுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் நகராட்சி மேலாளர் ஜோதிமணி நகர்மன்றத் துணைத் தலைவர் பொ.தீபா முன்னிலையில் வரவேற்றனர். நகர்மன்ற உறுப்பினர்கள் எஸ், மகேஸ்வரி, வி. பிரியதர்ஷினி, த.வாணிஸ்ரீ, மு. தமிழ்செல்வன், சி.ஜெயக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

நகர்மன்ற உறுப்பினர்கள் எஸ். சென்னியப்பன், எஸ்.ஹக்கீம், ஏ.மூர்த்தி, ஆர்.சவரியம்மாள், கா. பிரதீபாள், பூ.சுமதி, பி.சரோஜா, ஏ.சுமையா பானு, என். நித்தியா மெய்யழகன், ஆர்.வேலுமணி, ஜோ.ஹெலன் ஜெரி, த.எஸ்.இந்திரா எஸ்.தமிழ்ச்செல்வி, நகராட்சி சுகாதார அலுவலர் ஆர். ரவிச்சந்திரன், உதவி வருவாய் அலுவலர் நந்தகோபால், நகர அமைப்பு ஆய்வாளர் . முகிலன்,நகராட்சி சுகாதார ஆய்வாளர்கள்பி.கே.சௌந்தர்ராஜன், எம்.நிருபன் சக்கரவர்த்தி, நகராட்சி அதிகாரிகள், பணியாளர்கள், நகரின் முக்கியபிரமுகர்கள், சங்கநிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபி நகரம் சி.கே.கே. நகர் அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில் 108 திருவிளக்கு பூஜை (ஆடி பூரம்) நடைபெற்றது. இதில் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பூஜையில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# சேலம் கோட்டை மாரியம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர்என்.சக்திவேலுவிற்கு"மாரி மைந்தன்" விருதளிப்பு...



சேலம் கோட்டை அருள்மிகு ஸ்ரீ பெரிய மாரியம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ரொட்டேரியன்எஸ்.டி.என்.சக்திவேல் அவர்களுக்குத் தெய்வீகத் தமிழ்ச் சங்கம் சார்பில் "மாரிமைந்தன் " திருக்கோயில் திருப்பணிச் செல்வர் "ஆகிய விருதுகள் திருமணிமுத்தாறு பாதுகாப்பு அறக்கட்டளை நிறுவனர் சுவாமி ராமானந்தர் திருக்கரங்களால் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியேற்பாடுகளை சுவாமி வீரபத்ரானந்தபுரி, ஸ்ரீதர் ஆகியோர் செய்திருந்தனர். அதுசமயம் உயிர்மெய்த் தமிழ்ச் சங்கம் , உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநிலத் தலைவர் "சேலத்து பாரதி", சொற்கோ சொல்லரசர்அவர்கள்சேலம்கோட்டை பெரிய மாரியம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் சக்திவேல் அவர்கள் பெற்ற விருதுகளைக் கண்ணுற்று, அகமகிழ்ந்து, முகமலர்ந்து, உள்ளம் குளிர்ந்து சால்வை அணிவித்தார்.



கடலூரில் 80 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு பொதுப்பணித்துறை அலுவலகத்தில் கண்காணிப்பு பொறியாளர் மரிய சூசை .கடலூர் வெள்ளையாறு வடிநில உபக்கோட்ட உதவி செயற் பொறியாளர் வெற்றிவேல் ஆகியோர் தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்கள்.இந்நிகழ்ச்சியில் உதவி செயற் பொறியாளர் வாசுலிங்கம் .ஆட்சி அலுவலர் வெங்கடாஜலபதி. அலுவலர்கள். பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# சுதந்திர தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபை கூட்டம் சிறப்பு விருந்தினராக கலெக்டர் கலந்து கொண்டார்




ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, துய்யம்பூந்துறை ஊராட்சி டி.மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சுதந்திர தினத்தையொட்டி ஊர் பெரியவர் வெங்கடாச்சலம் தலைமையில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

கிராம சபை என்பது கிராம மக்களின் ஜனநாயகப் பங்கேற்பை உறுதி செய்யும் மிக முக்கியமான அமைப்பாகும். கிராம சபையில் பொதுமக்கள் தங்களது கிராமத்தின் தேவைகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் குறித்து நேரடியாக விவாதித்து முடிவெடுக்கும் வாய்ப்பு உள்ளது. மாணவர்கள் தங்களது அறிவையும் புதிய சிந்தனைகளையும் கிராம வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டும். கிராம ஊராட்சியின் வரவுசெலவு விவரங்கள், மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து பொது மக்களுக்கு வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே இத்தகைய விவரங்கள் கிராம சபை கூட்டத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. ஊராட்சியில் நடைபெறும் அனைத்து முக்கிய பணிகள் மற்றும் செலவினங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து, அவற்றிற்கு தங்களது ஒப்புதலை வழங்குவது கிராம சபையின் முக்கிய நோக்கமாகும். அரசின் நலத்திட்டங்களில் தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும் கிராம சபை முக்கிய பங்காற்ற வேண்டும். கிராமத்தில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் எந்தப் பணிக்கு முதலில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையும் கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும். சாலை, குடிநீர், வடிகால், குளம் தூர்வாருதல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான தேவைகளை முன்னுரிமைப்படுத்தி, அரசுத் திட்டங்கள் மற்றும் ஊராட்சியின் சொந்த வருவாய் மூலம் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வி பயிலும் இளைஞர்கள் தங்களது அறிவு, தொழில் நுட்பத் திறன் மற்றும் புதிய சிந்தனைகளை கிராமத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முன்வர வேண்டும். பொதுமக்கள் மட்டுமின்றி, இளைஞர்களும் ஒவ்வொரு கிராம சபை கூட்டத்திலும் தவறாமல் பங்கேற்க வேண்டும். மேலும், கிராமங்களில் குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு தொடர்ந்து செயல்பட வேண்டும். எனவே, கிராம சபை கூட்டம் என்பது கிராமத்தின் எதிர்கால வளர்ச்சியை தீர்மானிக்கும் ஜனநாயகத்தின் அடித்தளமாகும். ஆண்டு தோறும் நடைபெறும் அனைத்து கிராம சபை கூட்டங்களிலும் பொதுமக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் தங்கள் பகுதியில் செயல்படுத்தப்படும் அரசுத்திட்டங்கள் குறித்தும், தங்கள் கிராமத்தை முன்னேற்றிட மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப்பணிகள் மற்றும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றிட நல்வாய்ப்பாக பயன்படுத்தி கொள்ள வேண்டுமென மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் கிராம சபை கூட்டத்தில் துய்யம்பூந்துறை ஊராட்சியில் சிறப்பாக பணியாற்றிய தூய்மை பணியாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். மேலும், வி.பி.ஜி.ராம்ஜி திட்ட உறுதிமொழி மற்றும் போதைப்பொருள் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட கலெக்டர் தலைமையில் ஊர் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து, கிராம சபைக் கூட்டத்தில் மக்களை தேடி மருத்துவத்திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு மருந்துப் பெட்டகம், 2 கர்ப்பிணித்தாய்மார்க்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் வழங்கினார். மொடக்குறிச்சி, துய்யம் பூந்துறை ஊராட்சி, டி.மேட்டுப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள நூலகத்தினை பார்வையிட்டு, அரசு போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள், பிற நூல்கள், தினசரி வருகை தரும் வாசகர்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நீருந்து நிலையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, திண்டல், அருள்மிகு வேலாயுத சாமி திருக்கோயில் சுதந்திர தினத்தையொட்டி சமபந்தி விருந்தில் மாவட்ட கலெக்டர் மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பொதுமக்களுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டார்.

இக்கூட்டத்தில், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, உதவி இயக்குநர் தோட்டக் கலைத்துறை குருசரஸ்வதி, மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் மோகனா, மொடக்குறிச்சி வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு, உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

17.08.2026

# திருப்பூரை சேர்ந்த நேர்மையான அரசு அதிகாரிக்கு தங்கப்பதக்கம் முதலமைச்சர் வழங்கினார்



திருப்பூர் வடக்கு அனுப்பர்பாளையத்தை சேர்ந்த கணேசன் பழனியம்மாள் அவர்களின் இளைய மகன் வாஞ்சிநாதன் அவர்கள் மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் உயர் அரசு அதிகாரியாக பணியாற்றி வருகிறார் ஆகஸ்ட் 15 ல் 80 வது சுதந்திர தின நாளில் மாண்புமிகு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களால் மத்திய கூட்டுறவு வங்கியை திறம்பட சிறப்பாக வழி நடத்தி சென்றதற்காகவும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடன் உதவி வழங்கி அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியதற்காகவும் தமிழ்நாட்டிலேயே முதன்மையானவராக அர்ப்பணிப்புடன் நேர்மையாக பணியாற்றியதற்காக தங்க பதக்கம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்






தேனி மாவட்டம் தேனி ஊராட்சி ஒன்றியம் அம்பாசமுத்திரம் ஊராட்சியில் 80 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா வைத்தியநாதன் அவர்கள் சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# குன்னூர் விநாயகர் கோவிலில் சமபந்தி விருந்து



80வது சுதந்திர தின விழா நேற்று நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.இதில் ஒரு பகுதியாக குன்னூர் சுற்றுவட்டார பகுதியில் அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் கொடியேற்றப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.இந்நிலையில்நேற்றுதமிழகஅறநிலை சார்பில் குன்னூர் விநாயகர் இப்பகுதி நகரமன்ற உறுப்பினர்ரங்கராஜ் தலைமையில் ஜமாபந்தி விருந்து கோவில் செயல் அலுவலர் மற்றும்அர்ச்சகர்கள்,பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# நீலகிரி மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் கட்டுமான நிறுவனமும் இணைந்து ரத்ததான முகாம்



நாடு முழுவதும் 80 ஆவது சுதந்திர தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது இந்நிலையில் நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள சேலாஸ் பகுதியில்உள்ளதனியார்மண்டபத்தில்நீலகிரிமாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் தனியார் கட்டுமான நிறுவனம், கோவை தனியார் மருத்துவமனையும் இணைந்து ரத்ததான முகாமினை நடத்தினர். இதில் 150 க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர் இதில் சுற்றுலா வாகன ஓட்டுனர்கள் மற்றும் உள்ளூர் வியாபாரிகள் மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் (17.08.2026)

**மேஷம்:** இன்று நாள் முழுவதும் உற்சாகம் நிறைந்திருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபச் செய்திகளும் வந்து சேரும். நிதி நிலைமை சீராக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை. தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரக்கூடும்.

**கடகம்:** திட்டமிட்ட வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். தொழில் வளர்ச்சி அடையும். கடன் பிரச்சனைகள் குறைய வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**கன்னி:** நீண்ட நாட்களாக தடைபட்ட காரியங்கள் சிறப்பாக முடிவடையும். பணியிடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான சூழல் நிலவும்.

**துலாம்:** சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதில் அமைதியும் தெளிவும் உண்டாகும். நிதானமாகச் செயல்படுவது நல்லது.

**விருச்சிகம்:** பொருளாதார ரீதியாக சிறப்பான நாள். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

**தனுசு:** உத்தியோகத்தில் பொறுப்புகளும் முன்னேற்றமும் கூடும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையின் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூரச் செய்திகள் அனுகூலமாக இருக்கும். தொழில் ரீதியான அலைச்சல் குறையும்.

**கும்பம்:** வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. மாலையில் நல்ல மாற்றம் உண்டாகும்.

**மீனம்:** கணவன்மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். பிரிந்த நண்பர்கள் மீண்டும் இணைய வாய்ப்புள்ளது.

# குன்னூரில் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் வீசி செல்லும் பிளாஸ்டிக் வனவிலங்குகள் பாதிப்பு ஏற்படும் என்பதால் வனத்துறையினரே அவற்றை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்



நீலகிரி மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதிகள் உள்ளன இங்கு யானைகள் சிறுத்தை கரடி காட்டெருமை உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகள் உள்ளன இந்த நிலையில் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் மக்கள் பலரும் பிளாஸ்டிக் உட்பட குப்பைகளை வனப்பகுதிகளிலும் சாலையோரங்களிலும்வீசிசெல்கின்றனர் இதனால் இதனை உட்கொள்ளும் வனவிலங்குகளுக்கு பாதிப்புகள் ஏற்படுவதுடன் உயிரிழப்பும் ஏற்பட்டு வருகிறது இதனை தடுக்கும் விதமாக குன்னூர் அருகே உள்ள நகராட்சிக்கு சொந்தமான பந்துமை தடுப்பணை மற்றும் வனப் பகுதியில் வனத்துறையினர் இவற்றை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு டன் அளவில் குப்பைகள் சேகரித்து ஒட்டுபட்டறை உள்ள குப்பை மேலாண்மை மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. எனவே இனிவரும் காலங்களில் யாரும் குப்பைகளையும் பிளாஸ்டிக் களையும் வனப்பகுதிகளில் வீச வேண்டாம் என வனத்துறையினர் அறிவுரை வழங்கியுள்ளனர்

# வங்காளதேச கிரிக்கெட்டின் மிகப்பெரிய வெற்றி: ஷான்டோ



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றியை பதிவு செய்ததைத் தொடர்ந்து, வங்காளதேச கேப்டன் நஜ்முல் ஹொசைன் ஷான்டோ இந்த வெற்றி தங்கள் நாட்டின் கிரிக்கெட் வரலாற்றில் மிகப்பெரிய வெற்றி என்று பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

இது எந்த வடிவத்திலும் வங்காளதேசத்தின் மிகப்பெரிய வெற்றி. எதிர்காலத்தில் இன்னும் சிறப்பான சாதனைகளை படைக்க விரும்புகிறோம். சில ஆண்டுகளில் அணியில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு வேகப்பந்து வீச்சாளர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.என தெரிவித்தார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் வங்கதேசம் 10 என முன்னிலை பெற்றுள்ளது. அடுத்த டெஸ்ட் போட்டியிலும் வெற்றி பெற்று தொடரை 20 என கைப்பற்ற வேண்டும் என்பதே வங்காளதேச அணியின் அடுத்த இலக்காக உள்ளது.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட்: சாதனை படைத்த தேவ்தத் படிக்கல்



இந்தியகிரிக்கெட்அணிஇலங்கைக்குசுற்றுப்பயணம்மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. காலே நகரில் நேற்று தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட்டிங் தேர்வு செய்து விளையாடி வருகிறது.

இந்திய வீரர் தேவ்தத் படிக்கல் அபாரமாக ஆடி சதம் விளாசினார். அவர் தற்போது 164 ரன்கள் எடுத்த நிலையில் களத்தில் உள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான டெஸ்ட்டில் இந்திய வீரர் படிக்கல் சாதனை படித்துள்ளார். இலங்கைக்கு எதிராக 3வது வரிசை வீரராக (ஒன் டவுன்) களமிறங்கி 150 ரன்கள் எடுத்த 3வது இந்திய வீரர் என்ற சாதனையை தேவ்தத் படிக்கல் படைத்துள்ளார்.

இதற்கு முன்பாக இலங்கைக்கு எதிராக 3வது வரிசை வீரராக களமிறங்கிய இந்திய வீரர்கள் ராகுல் டிராட் (177 ரன்கள் 2009ம் ஆண்டு), புஜாரா (153 ரன்கள் 2017ம் ஆண்டு) ஆகிய இருவர் மட்டுமே 150 ரன்களுக்குமேல் எடுத்துள்ளனர். தற்போது 150 ரன்களை கடந்த தேவ்தத் படிக்கல் இந்த சாதனை பட்டியலில் 3வது வீரராக இடம்பிடித்துள்ளார்.

# கரீபியன் பிரீமியர் லீக்: ட்ரின்பகோவை வீழ்த்தி ஜமைக்கா அபார வெற்றி



14வது கரீபியன் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் கடந்த 7ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த டி20 கிரிக்கெட் தொடரில் அன்டிகுவா அண்ட் பார்புடா பால்கன்ஸ், பார்படோஸ் ட்ரைடென்ட்ஸ், கயானா அமேசான் வாரியர்ஸ், செயின்ட் லூசியா கிங்ஸ், செயின்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸ் பேட்ரியாட்ஸ், ட்ரின்பகோ நைட் ரைடர்ஸ், ஜமைக்கா கிங்ஸ்மென் ஆகிய 7 அணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், கரீபியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெற்ற 8வது லீக் ஆட்டத்தில் ஜமைக்கா கிங்ஸ்மென் ட்ரின்பகோ நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இப்போட்டியில் டாஸ் வென்ற ஜமைக்கா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய ட்ரின்பகோ 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 182 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் கேப்டன் பூரன், போலார்டு அதிகபட்சமாக தலா 44 ரன்களை சேர்த்தனர்.

இதனை தொடர்ந்து 183 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் களமிறங்கிய ஜமைக்கா 18.4 ஓவரில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 183 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் ட்ரின்பகோவை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஜமைக்கா அபார வெற்றிபெற்றது. ஜமைக்கா தொடக்க வீரர் மெக்கன்சி 25 பந்துகளில் 69 ரன்கள் குவித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்

# இளனின் "பியார் பிரேமா கல்யாணம்" படத்தின் "கிரேசி லவ்" வீடியோ பாடல் வெளியானது




'பியார் பிரேமா காதல்', 'ஸ்டார்' ஆகிய படங்களை இயக்கிய இளன், தற்போது 'பியார் பிரேமா கல்யாணம்' என்ற படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இந்தப் படத்தை அவரே எழுதி, இயக்கியுள்ளார்.

சான்வீ மேக்னா நாயகியாக நடித்துள்ள இப்படத்தில் ராதிகா சரத்குமார், யோகி பாபு, எம்.எஸ்.பாஸ்கர், கீதா கைலாசம், இளங்கோ குமரவேல், செந்தில், மாறன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். யுவன் சங்கர் ராஜா இசை அமைத்துள்ளார். 'மேட் இன் கொரியா'வைத் தயாரித்த 'ரைஸ் ஈஸ்ட் என்டர்டெயின்மென்ட்' ஸ்ரீநிதி சாகர் தயாரித்துள்ளார்.

திருமணத்துக்குப் பிறகும் பெற்றோர் வீட்டை விட்டுச் செல்ல மறுக்கிறார் நாயகி சான்வீ. அதனால், அவரது கணவரான இளன், மனைவி வீட்டுக்கே குடி பெயர்கிறார். இதன் பின்னர் தொடங்கும் குடும்ப கலாட்டா, கலாச்சார மோதல்கள், உறவு சிக்கல்கள் மற்றும் உணர்வுப்பூர்வமான தருணங்கள் என சிரிப்பும், சிந்தனையும் கலந்த பயணமாக படம் நகர்கிறது. இறுதியில், "சந்தோஷமாக வாழ்வதற்கான விதிகளை மற்றவர்கள் தீர்மானிக்க வேண்டியதில்லை" என்பதை படம் அழகாக எடுத்துரைக்கிறது.

# ஐஸ்வர்யா லட்சுமியின் "சம்பராலா எடிகட்டு" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




சாய் துர்கா தேஜ் தற்போது 'சம்பராலா எடிகட்டு' என்ற பீரியட் ஆக்சன் படத்தில் நடித்து வருகிறார். ஐஸ்வர்யா லட்சுமி கதாநாயகியாக நடிக்கிறார். ஜெகபதி பாபு, சாய் குமார், ஸ்ரீகாந்த், அனன்யா நாகல்லா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். ரோஹித் கே.பி. இயக்கும் இப்படத்தை 'ஹனுமான்' புகழ் கே. நிரஞ்சன் ரெட்டி மற்றும் சைதன்யா ரெட்டி ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர். பி அஜனீஷ் லோக்நாத் இசையமைக்கிறார். சாய் துர்கா தேஜ்ன் தோற்றமும், படத்தின் கதாநாயகி ஐஸ்வர்யா லட்சுமியின் தோற்றமும் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், சாய் துர்கா தேஜ் நடிக்கும் 'சம்பராலா எடிகட்டு' திரைப்படம் ஜனவரி 12, 2027 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இது தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாக உள்ள ஒரு பான்இந்தியா அதிரடி திரைப்படமாகும்.

# பிரபல இந்தி நடிகை மரணம் ரசிகர்கள் அதிர்ச்சி



பிரபல இந்தி நடிகை அனன்யா ராஜ் (வயது 27). இவர் இந்தியில் 7 ஹவர்ஸ் டு ஹோ, தி பைனல் எக்சிட், கோஸ்ட் ஆகிய படங்களில் நடித்துள்ளார். தெலுங்கில் தஹ்டிலி என்ற படத்திலும் நடித்துள்ளார். மேலும், பல்வேறு குறும்படங்கள், இசை நிகழ்ச்சிகளிலும் தொகுப்பாளராக பணியாற்றியுள்ளார். டிவி வெப் தொடர்களிலும் நடித்துள்ளார். இந்நிலையில், அனன்யா ராஜ் மரணமடைந்துவிட்டதாக அவரது குடும்பத்தினர் இன்று தெரிவித்துள்ளனர். உடல்நலம், மனநலம் தொடர்பான பிரச்சினைகளை சந்தித்து வந்த அனன்யாராஜ்கடந்தமாதம்15ம்தேதிவீட்டில்உறக்கத்திலேயேமரணமடைந்துவிட்டதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அனன்யா ராஜ்இன் மறைவு செய்தி அவரது ரசிகர்கள், திரைத்துறையினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அனன்யாவின் மறைவுக்கான முழுமையான காரணத்தை குடும்பத்தினர் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.